4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், உடுமலைப்பேட்டை

சாட்சியின் சாட்சியம் திரு. C. ராஜலிங்கம், பி.ஏ., பி. எல்., 4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, உடுமலைப்பேட்டை அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

அ.வ.எண். 833 / 2023 நாள்: 11.03.2025 வா.சா.1– சுபாஷ் சந்திரபோஸ்

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, குறுக்கு விசாரணை -

வழக்கில் குறிப்பிட்டுள்ள முகவரியில் 20 ஆண்டுகளுக்கு மேலாக வசிக்கிறேன். நான் எவ்வளவு காலமாக பைனான்ஸ் தொழில் செய்து வருகிறேன் என்றால் பைனான்ஸ் தொழில் செய்யவில்லை. வட்டிக்கு பணம் கொடுக்கும் தொழில் எவ்வளவு ஆண்டுகளாக செய்கிறேன் என்றால் அவ்வாறு தொழில் செய்யவில்லை. நான் வட்டிக்கு பணம் கொடுப்பதில்லை. பிரதிவாதி தொடர்பாக வட்டிக்கு தான் பணம் கொடுத்துள்ளேன். பிரதிவாதி ஏற்கனவே பலமுறை பணம் வாங்கி திருப்பி கொடுத்ததாக கூறுவதற்கு ஆவணம் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் காய்கறி வியாபாரம் செய்கிறேன். காய்கறி வியாபாரத்திற்கு பதிவுச்சான்று உண்டு. வியாபாரத்திற்கும், எனக்கும் தனி வங்கி கணக்கு உண்டு என்றால் சரிதான். பிரதிவாதி கமலம் டிரேடர்ஸ் என்ற பெயரில் அவருடைய கணவர் தொழிலை தொடர்ந்து நடத்தி வருகிறார் என்றால் சரிதான். பிரதிவாதி மீது பல நபர்கள் பணம் தொடர்பாக வழக்கு தாக்கல் செய்துள்ள விவரம் தெரியும் என்றால் சரிதான். நீதிமன்றத்திற்கு வந்த பிறகு தெரியும். எனக்கு வருமான வரி கணக்கு உள்ளது. நான் தொடர்ந்து வருமான வரி செலுத்தி வருகிறேன். 2022 – 2023 கால கட்டத்திற்கு நான் என்னுடைய வருமானம் எவ்வளவு என்று காட்டியுள்ளேன் என்றால் நினைவில்லை. என்னுடைய ஆண்டு வருமானம் 7 முதல் 10 லட்சம் வரை இருக்கும். வருமான வரி கணக்கில் என்னுடைய கடன் சம்பந்தமான விவரங்களை காண்பிப்பது வழக்கம் என்றால் ஆடிட்டரை கேட்டால் தான் தெரியும். ஆடிட்டரிடம் யார், யாரிடம் இருந்து பணம் வர வேண்டும் என்ற விவரத்தை தெரிவித்துள்ளேனா என்றால் ஆமாம். பிரதிவாதி பெற்ற கடனை

ஆடிட்டரிடம் தெரிவித்துள்ளேனா என்றால் ஆமாம். பிரதிவாதி காசோலை கொடுக்கும் போது என்னுடன் இருந்த நபர்கள் இருவரும் என்னுடைய நண்பர்கள் என்றால் சரிதான். பிரதிவாதிக்கு கடன் கொடுக்கும் யார் அருகில் இருந்தார்கள் என்ற விவரத்தை வழக்கில் தெரிவித்துள்ளேனா என்றால் கூறவில்லை. உண்மையில் கடன் கொடுத்திருந்தால் பிரதிவாதியுடன் இருந்த நபர்கள் குறித்த விவரத்தை தெரிவித்திருப்பேன் என்றால் என் தாயார் இருந்தார். பிரதிவாதிக்கு பணம் கொடுத்ததாகவும், அதற்கு பிரதிவாதி எனக்கு பிராமிசரி நோட் எழுதிக்கொடுத்ததாக கூறியுள்ளது தவறானது என்றால் சரியல்ல. உண்மையில் பிராமிசரி நோட் எழுதிக்கொடுத்திருந்தால் சாட்சிகள் உடன் இருந்த விவரத்தை சொல்லியிருப்பேன் என்றால் சரியல்ல. 2022ம் வருடம் 5 ம் மாதம் பிரதிவாதி என்னிடம் கடன் வாங்கியதாக சொல்லும் போது பிரதிவாதி சேலத்தில் ஒரு சொத்தை விற்பதற்காக முன்பணம் வாங்கியிருந்தார் என்றும், அதனால் பிரதிவாதிக்கு என்னிடம் கடன் பெற வேண்டிய தேவை ஏற்படவில்லை என்றால் சரியல்ல. நான் 7ம் வகுப்பு வரை படித்துள்ளேன். வரவு செலவுகள் சம்பந்தமாக ஆடிட்டரை கலந்து ஆலோசிப்பது வழக்கம் என்றால் சரிதான். வருமான வரி சட்டப்படி ரூ.20,000/-க்கு மேல் பணப்பரிமாற்றம் ஏற்படும் பட்சம் வங்கி பரிவர்த்தனை மூலமாக செய்ய வேண்டும் என்றால் பிரதிவாதி தான் வங்கி மூலமாக வேண்டாம் என்று கையில் பணம் தருமாறு சொன்னார். மேற்படி தொகை ரூ.16 லட்சத்தை எந்த வங்கியில் இருந்து எடுத்து பிரதிவாதிக்கு கொடுத்தேன் என்று வழக்குரையிலும், சாட்சியத்திலும் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். ஆனால் அதனை எடுத்து வைத்திருந்தேன். உண்மையில் பணம் கொடுத்திருந்தால் தேதி மற்றும் மாதம் வழக்கில் குறிப்பிட்டு கூறியிருப்பேன் என்றால் சரியல்ல. தனலட்சுமி வங்கியிலிருந்து ஒரு மாதத்திற்கு முன்பு இரண்டு தவணைகளாக எடுத்தேன். பிரதிவாதி என்னிடம் கடன் கேட்டதாக கூறுவதும், நான் வங்கியிலிருந்து பணம் எடுத்து வைத்திருந்ததாக கூறுவதும் பொய்யான விவரங்கள் என்றால் சரியல்ல. வழக்கு காசோலை உள்பட பிரதிவாதி சம்பந்தப்பட்ட பல ஆவணங்களை பிரதிவாதியின்

நிறுவனத்தில் மேலாளராக இருந்த செல்வம் என்பவர் எடுத்து சென்று மோசடியாக ஆவணம் தயாரித்து வழக்கு தாக்கல் செய்வதாக செல்வம் மீது பிரதிவாதி ஏற்கனவே புகார் கொடுத்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. அவ்வாறு செல்வம் எடுத்துச்சென்ற காசோலைகளில் ஒன்றை குறுக்கு வழியில் அடைந்து அந்த காசோலையை பயன்படுத்தி பிரதிவாதி மீது இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு காசோலையில் உள்ள விவரங்களை பிரதிவாதி நிரப்பவில்லை என்றும், அதில் உள்ள கையொப்பம் பிரதிவாதியுடையது அல்ல என்றும் அதனால் தான் கையெழுத்து வேறுபாடாக உள்ளது என்று காசோலை திருப்பப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பிரதிவாதி எனக்கு திருப்பி செலுத்த வேண்டிய சட்டப்பூர்வமான கடன் எதுவும் கிடையாது என்றும், அந்த காசோலை பிரதிவாதியால் வழங்கப்படவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதியின் கையெழுத்தை மோசடியாக போட்டு காசோலையை வைத்து வழக்கு தாக்கல் செய்துள்ளதால் வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றும், தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. பிரதிவாதிக்கு என்னை யார் என்றே தெரியாது என்றால் சரியல்ல.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சி விசாரிக்கப்பட்ட, சாட்சியின் சாட்சியம் தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சாட்சியாலும் படித்து பார்க்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பு சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.

Sd/–C.Rajalingom.
4வது கூடுதல் மாவட்ட நீதிபதி,
உடுமலைப்பேட்டை.